தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ச. கார்த்திகேயன் Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 3-5-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடை செய்த உருளைக் கிழங்கினை விற்கவும்

உலக அளவில் கிழங்கு வகைப் பயிர்களில் முக்கியப் பயிரான உருளைக் கிழங்கு ஏறத்தாழ 150 நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டு நூறு கோடிக்கும் மேலான மக்கள் உட்கொள்கின்றனர். 2012-13ல் இந்தியாவில் உருளைக் கிழங்கு 19.65 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 447 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. உத்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் பீகார் ஆகிய மூன்று மாநிலங்கள் மட்டுமே இந்தியாவின் மொத்த சாகுபடி பரப்பில் 85 சதவீதத்தையும் உற்பத்தியில் 89 சதவீதத்தையும் பங்களிக்கின்றன. தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையத்தின் கணக்கீட்டின்படி 2012-13ல் தமிழ்நாட்டில் 4860 எக்டர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு 97,100 டன்கள் உருளைக் கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் கடந்த ஆண்டைக் காட்டிலும் உருளைக்கிழங்கு சாகுபடி பரப்பில் ஒரு சதவீதமும் உற்பத்தியில் 7 சதவீதமும் குறைந்துள்ளது.

தமிழ்நாட்டில் நீலகிரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களின் மலைப் பிரதேசப் பகுதிகளில் உருளைக் கிழங்கு பயிரிடப்படுகிறது. பிப்ரவரி மற்றும் ஏப்ரல் மாதங்களில் குறைந்த வரத்து வருவதால், தமிழ்நாட்டிலுள்ள வியாபாரிகள் தேவையான உருளைக் கிழங்கை உத்திரப் பிரதேசத்தில் உள்ள ஆக்ரா மற்றும் ஹசாந்பூர், மத்தியப் பிரதேசத்தில் உள்ள இந்தூர் மற்றும் கர்நாடகாவில் உள்ள கோலார் போன்ற சந்தைகளில் இருந்து கொள்முதல் செய்கின்றனர்.

அதிக உற்பத்திச் செலவு, தண்ணீர் பற்றாக்குறை, வேலை ஆட்கள் பற்றாக்குறை மற்றும் வெளி மாநிலங்களின் அதிக வரத்தினால் நீலகிரி விவசாயிகளுக்கு குறைந்த விலையே கிடைத்தது. எனவே விவசாயிகள் மற்ற மலைப் பிரதேச காய்கறி சாகுபடிக்கு

மாறியுள்ளனர். நீலகிரி உருளைக் கிழங்கு சென்னை, கோவை, மதுரை, திருச்சி, சேலம் மற்றும் வேலூர் போன்ற இடங்களுக்கும், வெளிமாநில சந்தைகளுக்கும் செல்கிறது. எப்பொழுதும், நீலகிரியில் விளையும் உருளைக்கிழங்கு உயர்ந்த தரம் என்பதால், கர்நாடகா மற்றும் வடமாநிலங்களில் விளையும் உருளைக் கிழங்கை விட இதற்கு அதிக விலை கிடைக்கிறது. மே முதல் டிசம்பர் வரை நீலகிரி உருளைக் கிழங்கு வரத்து இருக்கும். ஜுலை முதல் செப்டம்பர் மாதங்களில் வரத்து அதிகரித்து காணப்படும். நீலகிரி விவசாயிகள் நீர் போகத்தில் (பிப்ரவரி) விதைத்த உருளைக் கிழங்கிற்கு அறுவடை சமயமான மே மற்றும் ஜுன் மாதத்தில் என்ன விலை கிடைக்கும் என அறிந்து கொள்ள ஆர்வமாக உள்ளனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் மேட்டுப்பாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கடந்த 23 ஆண்டுகளாக நிலவிய உருளைக்கிழங்கு விலைகளை ஆய்வு செய்தது. ஆய்வு முடிவுகளின்படி நல்ல தரமான நீர்போக உருளைக் கிழங்கிற்கு விவசாயிகளுக்கு மே, ஜுன் மாதங்களில் கிலோவிற்கு 20 ரூபாய் முதல் 25 ரூபாய் வரை விலை கிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இன்னும் இரண்டு மாதங்களுக்கு விலை ஏற்றத்திற்கான வாய்ப்புகளும் குறைவு. எனவே விவசாயிகள் அறுவடை செய்த உருளைக் கிழங்கினை இருப்பு வைக்காமல் உடனே விற்றுவிடும்படி பரிந்துரைக்கப் படுகின்றனர். பொதுமக்கள் கடைகளில் உருளைக் கிழங்கினை வாங்கும் போது மஞ்சள் நிறத் தோலுடன் கடினத்தன்மையுடன் இருக்கும் நீலகிரி உருளைக்கிழங்கைக் கண்டிறிந்து வாங்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:-</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003.
தொலைபேசி: 0422-2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:-</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம்,
விஜயநகரம்,
உதகமண்டலம்-643001.
தொலைபேசி: 0423-2442170

மக்கள் தொடர்பு அலுவலர்